2014 ஜூலை 15]

தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் புதிய கட்டடம் கட்டும் பணி எப்போது துவங்கும் என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள 284 வட்டாட்சியர் அலுவலகங்களில், 208 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசின் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. புதிதாக உருவாக்கப்பட்ட 34 வட்டாட்சியர் அலுவலகங்கள் உட்பட 42 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளவற்றில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட உசிலம்பட்டி தொகுதியில் செயல்படும் வட்டாட்சியர் அலுவலகமும் ஒன்று. ஆகவே, அவற்றிற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

146—

கிளை நூலகம்

***35956—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, பவுஞ்சூரில் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதி, பவுஞ்சூரில் பகுதி நேர நூலகம் திறப்பதற்கு இலவசமாக இட வசதி மற்றும் உரிய

நிபந்தனைகளை நிறைவேற்றித் தருமாறு பவுஞ்சூர் ஊராட்சி மன்றத் தலைவரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன், அங்கு பகுதிநேர நூலகம் திறக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கை கூப்பிய கனநொடியில் கலி தீர்க்கும் எங்களின் கருணையே! கல்விக்கு அதிபதி கலைமகளும் வியக்கின்றவகையில் கல்வியில் புரட்சி செய்திட்ட எங்கள் கழகத்தின் காவல் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) பசிப் பிணி போக்க அம்மா உணவகம், இன்றைக்கு உடற்பிணி போக்க அம்மா மருந்தகம், அம்மா உப்பு, தாகம் தீர்க்க அம்மா குடிநீர், இப்படி அற்புதமான திட்டங்களைத் தந்து கொண்டிருக்கின்ற எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) ஏங்குகின்ற ஏழைகளைத் தாங்கி நிற்கின்ற பூமியாக விளங்குகின்ற எங்கள் தாயே! திட்டமிடுதலில் கூர்மை, செயல்படுத்துவதில் நேர்மை, இவையே மாண்புமிகு அம்மா அவர்களின் சீர்மிகு பெருமைக்குக் காரணம். இப்படி புரட்சிகரமானத் திட்டங்களைத் தந்து, தமிழகத்திலே சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள், இன்றைக்குத் தமிழக மக்களுக்கு ஏற்றத்தைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தமிழக மக்கள் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழக வரலாற்றில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக்கொடுத்தார்கள். ஒரு புரட்சிப் பாதையை ஏற்படுத்த வழி வகுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த நல்ல நேரத்தில் பணிவோடு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மேலும், எங்கள் தொகுதிக்குட்பட்ட பவுஞ்சூரில் கிளை நூலகம் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைந்து செயலாற்றி கிளை நூலகம் அமைப்பதற்கான இடத்தினைத் தேர்வு செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 15]

எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே பவுஞ்சூரில் கிளை நூலகம் அமைத்துத் தர நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த ஆண்டே பவுஞ்சூரில் கிளை நூலகம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றார். கிளை நூலகம் அமைப்பதற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகள் உள்ளன:*

அவை, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட பகுதியாக இருக்க வேண்டும்; கிளை நூலகம் செயல்பட வாடகை இல்லாத இலவசக் கட்டடம் கொடுக்க வேண்டும்; சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் காலி மனை கொடுக்க வேண்டும்; தலா ரூ.1,000/- வீதம் செலுத்தும் இரண்டு புரவலர்களைச் சேர்க்க வேண்டும். ரூ.30/- வீதம் செலுத்தும் 200 நபர்களை நூலக உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும். இவற்றையெல்லாம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், ஊராட்சி மன்றத் தலைவர் ஆகியோருடன் இணைந்து வேகமாகச் செய்து கொடுக்கும்பட்சத்தில், பவுஞ்சூரில் விரைவில் கிளை நூலகம் அமைத்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

***35986—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—